**B 1018** **UTA2**

B.Ed. DEGREE EXAMINATION, MAY 2012

(For the candidates admitted from the academic year 2009–2010 and thereafter)

Optional Course : TAMIL — Paper II

Time : 3 hours Maximum marks : 80

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் 50 சொற்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 2 மதிப்பெண்கள்.

1. மொழியின் இன்றியமையாமை பற்றி எழுதுக.

2. தமிழ்மொழியின் தனித்தன்மைகளுள் எவையேனும் இரண்டு எழுதுக.

3. கல்வியின் நோக்கங்கள் யாவை?

4. தமிழ் இலக்கண நூலார் பிறப்பு அடிப்படையில் மெய்யொலிகளை எவ்வாறு வகைப்படுத்துகின்றனர்?

5. மதிப்புக் கல்வி என்பதனை வரையறுக்க.

6. நிறுத்தற்குறிகளின் இன்றியமையாமையை ஒரு சான்றுடன் புலப்படுத்துக.

7. புதுக்கவிதை, மரபுக்கவிதையினின்று எவ்வாறு வேறுபடுகின்றது?

8. மொழிக் கல்வியில் இசை பெறுமிடம் யாது?

9. நாடக உத்திகள் யாவை?

10. படைப்பு வழித் திறனாய்வு என்றால் என்ன?

11. அறிவியல் தமிழை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

12. மொழிபெயர்ப்பின் பயன்கள் பற்றி எழுதுக.

பகுதி ஆ — ($6 \times 5 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 5 மதிப்பெண்கள்.

13. கிளைமொழியின் தோற்றத்திற்கான காரணங்கள் யாவை?

14. கலைத்திட்டத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் பற்றி விளக்குக.

15. ஒலியன்களைக் கண்டறியும் கோட்பாடுகள் பற்றி எழுதுக.

16. மொழி வளர்ச்சியில் சூழ்நிலையின் பங்கு யாது என விவரி.

17. கவிதையில் கற்பனை பெறுமிடம் பற்றி எடுத்துரைக்க.

18. இயற்றமிழும் இசையும் இணைந்துள்ள நிலையைச் சில சான்றுகள் மூலம் புலப்படுத்துக.

19. செய்யுளை நாடகமாக்கிக் கற்பித்தலிலுள்ள கோட்பாடுகள், ஆசிரியரின் செயல்பாடுகள் பற்றி விவரி.

20. தமிழ் ஆட்சிமொழியாய் இருப்பதினால் ஏற்படும் பயன்களையும், நடைமுறை சிக்கல்களைத் தீர்க்கும் வழிமுறைகளையும் எழுதுக.

பகுதி இ — ($2 \times 15 = 30$ மதிப்பெண்கள்)

இரண்டு கட்டுரை வினாக்களுக்கு விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) கலைத்திட்டத்தில் தாய்மொழி பெறுமிடம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழ் ஒலிகளின் பிறப்புப்பற்றி விளக்கி, ஒலி பிறப்பிற்குப் பேச்சுறுப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என விவரி.

22. (அ) மொழிக் கல்வியில் மாணவர் செய்யும் பிழைகள் யாவை? அவற்றை ஓர் ஆசிரியராக நீ எவ்வாறு களைவாய் என விவரி.

(அல்லது)

(ஆ) சிறுகதை இலக்கியத்திற்குரிய இலக்கணத்தை எழுதி, அதன் தோற்றம் வளர்ச்சி பற்றி விவரித்து, புதுமைப்பித்தன் அல்லது லட்சுமியின் சிறுகதையுள் ஒன்று பற்றி ஆய்க.